# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 495/ 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.15**

| | | |
|---|---|---|
| பெயர் | – | மாரிகுமார் |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 05th day of March 2025.**

(Accused produced from custody)
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தற்போது தாழையூத்து காவல்நிலையத்தில் தலைமை காவலராகப் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2.7.2022ம் தேதி தாழையூத்து காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோது தாழையூத்து காவல்நிலைய குற்ற எண்.164/2022 சட்டப் பிரிவு 174 Crpc (suspicious death) வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் உதவி ஆய்வாளர் கார்த்திகேயன் என்பவரிடமிருந்து பெற்று குற்றவியல் நடுவர் எண்.3, திருநெல்வேலி அவர்களிடம் ஒப்படைத்தேன். அதற்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு அ.சா.ஆ.13. பின்னர் 02.7.2022ம் தேதி மேற்படி வழக்கு சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை சட்டப் பிரிவு 174 Crpc (suspicious death)லிருந்து சட்டப் பிரிவு 302, 392 இதச வாக மாற்றம் செய்து சட்டப்

பிரிவு மாறுதல் அறிக்கையை துரித தபாலாக ஆய்வாளரிடமிருந்து பெற்று குற்றவியல் நடுவர் எண்.3, திருநெல்வேலி அவர்களிடம் ஒப்படைத்தேன். அதற்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு அ.சா.ஆ.14. மேலும் 3.7.2022ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன மாயாண்டி என்பவரின் பிரேத விசாரணை அறிக்கையை ஆய்வாளரிடமிருந்து பெற்று குற்றவியல் நடுவர் எண்.3, திருநெல்வேலி அவர்களிடம் ஒப்படைத்தேன். அதற்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு அ.சா.ஆ.15. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

எங்களுக்கு வழங்கப்படும் கடவுச்சீட்டிற்கு என்று பரிந்துரைக்கப்பட்ட படிவம் உள்ளது. ஒவ்வொரு முறையும் எங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றிய பிறகு கடவுச்சீட்டை சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் ஒப்படைப்போம். எங்கள் காவல்நிலையத்தில் இருந்து நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கோ, நடுவரின் குடியிருப்புக்கோ 1 மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் இந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வாங்கியதாக சொல்வது உண்மையில்லை என்றும், அவ்வாறு வாங்கியதாக வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 495/ 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.16**

| | | |
|---|---|---|
| பெயர் | – | பாபு |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 05th day of March 2025.**

(Accused produced from custody)
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தாழையூத்து காவல்நிலையத்தில் பணியாற்றியபோது 02.7.2022 ம் தேதி காலை 10.30 மணிக்கு தாழையூத்து காவல்நிலைய குற்ற எண்.164/2022 சட்டப் பிரிவு 174 Crpc (suspicious death) @ 302, 392 IPC வழக்கில் இறந்துபோன கரையிருப்பு காசி நாடார் மகன் மாயாண்டி, வயது 60 என்பவரின் பிரேதத்தை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்து காவல்நிலைய காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்தேன். பிரேத விசாரணை முடித்து 12.35 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்றுக் கொண்டு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி

மருத்துவமனை சட்டம் சார்ந்த மருத்துவத் துறை பேராசிரியர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தேன். அதற்கான கடவுச் சீட்டு அ.சா.ஆ 16. மருத்துவர் பிரேத பரிசோதனை செய்யும்போது பிரேதத்தை அடையாளம் காட்ட உதவியாக இருந்தேன். பிரேத பரிசோதனை முடித்து இறந்து போன நபரின் உடலில் இருந்து கிழித்து எடுத்த உடைகளான வெள்ளைகலரில் லைட் ரோஸ் மற்றும் ஊதா கலரில் கோடு போட்ட கட்டம் போட்ட ஊண்பட்ட முழுக்கை சட்டை ஒன்று, ஊண்பட்ட வெள்ளை கலரில் பிரவுன் கலர் கோடு போட்ட கட்டம் போட்ட சாரம் ஒன்று, ஊண்பட்ட பிரவுன் கலர் ஜட்டி ஒன்று ஆகியவற்றை பெற்றுக் கொண்டு காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். பிரேதத்தை வாங்குவதற்கு உறவினர்கள் யாரும் வராததால் மீண்டும் பிரேதத்தை மருத்துவமனை சவக்கிடங்கில் பாதுகாப்பாக வைத்தேன். பிரேதத்தில் இருந்து கைப்பற்றிய ஆடைகள் தற்போது என்னிடம் காட்டப்படுவது தான். ஊண்பட்ட வெள்ளை கலரில் பிரவுன் கலர் கோடு போட்ட கட்டம் போட்ட சாரம் ஒன்று சா.பொ.8, ஊண்பட்ட பிரவுன் கலர் ஜட்டி ஒன்று சா.பொ.9. 04.7.2022 ம் தேதி மேற்படி இறந்து போன மாயாண்டியின் உடலை பெறுவதற்கு அவரது தம்பி வாங்க வருவதாக சொன்னதால் அவரிடம் பிரேதத்தை நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். 05.7.2022 ம் தேதி மேற்படி இறந்து போன மாயாண்டியின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். 26.07.2022 ம் தேதி திருநெல்வேலி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, தலைமை எழுத்தர் அவர்களிடமிருந்து நீதிமன்ற உத்தரவுப்படி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன்.

அதற்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுச் சீட்டு அ.சா.ஆ.17. உடல் உள்ளுறுப்புகளை பரிசோதனைக்கு எடுத்து செல்வதற்கு நீதித்துறை நடுவர் கொடுத்த கடிதம் அ.சா.ஆ.18. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் சொன்ன மாதிரி சொன்ன தேதிகளில் சொன்ன பணிக்காக சென்றதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக ஆய்வாளர் வேண்டுகோளுக்கிணங்க நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 12.07.2022ம் தேதியில் நான் சென்றதாக சொல்லும் பணிக்கு எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு அந்த பணிக்கு நான் செல்லவில்லை என்பதால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலே சொல்லப்பட்ட உடைகள் எதுவும் இறந்தவர் உடலில் இருந்து கிழித்தெடுக்கப்பட்டதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 495/ 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.17**

| | | |
|---|---|---|
| பெயர் | – | இசக்கிமுத்து |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 05th day of March 2025.**

(Accused produced from custody)
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தற்போது சீவலப்பேரி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராகப் பணிபுரிந்து வருகிறேன். 02.8.2022 ம் தேதி 9 மணிக்கு தாழையூத்து காவல்நிலைய ஆய்வாளரின் உத்தரவுப்படி தாழையூத்து காவல்நிலைய குற்ற எண்.164/2022 சட்டப் பிரிவு 174 Crpc (suspicious death) @ 302, 392 IPC வழக்கில் இறந்து போன மாயாண்டி, வயது 60 என்பவரின் பிரேத பரிசோதனையை முடித்து சேகரித்து வைக்கப்பட்டிருந்த தொடை எலும்பினை DNA பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3, திருநெல்வேலி தலைமை எழுத்தர் அவர்களிடமிருந்து D.No.874/2022 date 29.7.2022 ம் தேதி வழங்கப்பட்ட தபாலையும், பரிசோதனை முடித்து சேகரித்து வைக்கப்பட்டிருந்த மண்டை ஓட்டை புகைப்படத்துடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டி சூப்பர் இம்போசிசன்

அறிக்கைக்காக திருநெல்வேலி, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3 தலைமை எழுத்தரிடம் இருந்து D.No.875/2022 date 29.7.2022 ம் தேதி வழங்கப்பட்ட தபாலையும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சென்று சட்டம் சார்ந்த மருத்துவ பேராசிரியர் பிரசன்னா அவர்களிடம் கொடுத்து அங்கு மருத்துவமனை பாதுகாப்பில் இருந்த பொருட்களையும் மருத்துவர் கொடுத்த தபாலையும் பெற்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் சென்று பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டி மதுரை டிஎன்ஏ 198/2022 படி 03.08.2022 ம் தேதி ஒப்படைத்தும், சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகம் சென்று புகைப்படத்துடன் மண்டை ஓட்டை ஒப்பிட்டு பார்க்க வேண்டி Anthro 171/2022, 172/2022 படி 04.8.2022 ம் தேதி ஒப்படைத்து நிலையம் வந்தேன். இதற்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுச் சீட்டு அ.சா.ஆ.19. திருநெல்வேலி, நீதித்துறை நடுவர் எண்.3 29.7.2022 ம் தேதியிட்ட கொடுத்த வேண்டுகோள் கடிதங்கள் அ.சா.ஆ.20, அ.சா.ஆ.21. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் சொன்ன மாதிரி சொன்ன தேதிகளில் எனக்கு பணி ஒதுக்கப்பட்டு அந்த பணிகளை நான் செய்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளரின் வேண்டுகோளுக்கிணங்க நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை